## விடியல் பயிற்சி மையம்
## வேலூர்

செல்: 8122706441, 9487640063

www.vidiyalarni.blogspot.com


## TNPSC VAO தேர்வு - கிராம நிர்வாகம் : முக்கிய வினாக்கள்

1. வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு

   A) 27.05.2001 B) 27.05.2002 C) 27.05.2003 D) 27.05.2005

2. பகுதி நேர கிராம அலுவலர்கள் ஒழிப்பு அவசரச் சட்டம் அமலுக்கு வந்த நாள்

   A) 14.11.1980 B) 13.11.1980 C) 12.12.1980 D) 06.07.1995

3. பின்வருவனவற்றுள் தவறான கூற்றினை கண்டறிக.

   A) கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான நியமன அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலராவார்.

   B) நிர்வாக காரணங்களுக்காக கிராம நிர்வாக அலுவலரை வருவாய் நிர்வாக ஆணையரால் மட்டுமே மாவட்டத்திற்கு வெளியே பணியிட மாறுதல் செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

   C) 40 வயது முடிவுறக்கூடிய எவரும் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான நேரடி நியமனத்திற்கு தகுதியற்றவராவார்

   D) கிராம கணக்குகள் அனைத்தும் நிலம் சம்மந்தப்பட்டவை ஆகும்.

4. பொருத்துக.

   a. இருசால் நாமா — 1. கணக்கு எண் 7

   b. நில வருவாய் நிர்ணய சுருக்கம் — 2. கணக்கு எண் 15

   c. பட்டா படிவம் — 3. கணக்கு எண் 5

   d. சிட்டா படிவம் — 4. கணக்கு எண் 12

   e. அபராத கணக்கு — 5. கணக்கு எண் 10(1)

   f. தள்ளுபடி கணக்கு — 6. கணக்கு எண் 11

| | a | b | c | d | e | f |
|---|---|---|---|---|---|---|
| A | 2 | 4 | 6 | 5 | 3 | 1 |
| B | 2 | 4 | 6 | 5 | 1 | 3 |
| C | 4 | 6 | 5 | 1 | 3 | 2 |
| D | 4 | 6 | 5 | 2 | 3 | 1 |


விடியல்

5. ஒரு வருவாய் கிராமத்தின் வரலாற்றைக் கூறுவது?

A) அடங்கல் பதிவேடு
B) புலப்பட சுவடி
C) நிலையான "அ" பதிவேடு
D) 'டி' ஸ்கெட்ச்

6. ஒரு கிராமத்தின் மொத்த கேட்பு எவ்வளவு என்பதற்கு ஒப்புதல் அளிப்பவர்

A) வட்டாட்சியர்
B) கிராம நிர்வாக அலுவலர்
C) ஜமாபந்தி அலுவலர்
D) வருவாய் ஆய்வாளர்

7. நிலவரி கேட்பில் சேராதது

A) நிலக் குத்தகை
B) வறியவர் வழக்கு பாக்கி
C) சர்வே சி.எஸ். எம்(A)
D) மரப்பட்டா (ம) மீன் குத்தகை

8. பேரீஸ் கழிவுப் பதிவேடு என்பது

A) 10ல் 1
B) கி. கணக்கு 5
C) கி. கணக்கு 14
D) கி. கணக்கு 4

9. பின்வருவனவற்றை ஆராய்க.

i) கிராமத்தில் நீர்பாய்ச்சப்பட்ட பரப்பினை காண்பிக்கும் பதிவடு (அ) கி. கணக்கு 2-D ஆகும்.

ii) "G" அறிக்கை தயாரிக்கப் பயன்படுவது கிராம கணக்கு 2-F ஆகும்

iii) கிராமத்தின் சாகுபடி விவரங்கள் சரியாக பதியப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்க்க குடியானவர்களை அனுமதிக்க தேவையில்லை

iv) கிராம அளவில் தயாரிக்கப்படும் அறிக்கைகளுக்கு அடிப்படை ஆதாரம் அடங்கல் கணக்காகும்.

மேற்கண்டவற்றுள்

A) i, ii, iv சரி
B) i, ii, iii சரி
C) i, iii, iv சரி
D) ii, iii, iv சரி

10. ஏப்ரல் முதல் மார்ச் வரை பராமரிக்க வேண்டிய கணக்கு

A) கி.கணக்கு 3
B) 'அ' பதிவேடு
C) கி.கணக்கு 2
D) கி.கணக்கு 2 C

11. "பௌத்தி" என்று குறிப்பிடப்படுவது

A) நீதிமன்ற ஆணையின் பேரில் மாற்றம்
B) தனியார் விற்பினை (அ) கொடையின்பேரில் மாற்றம்
C) வாரிசு முறையின் பேரில் மாற்றம்
D) வாரிசற்று அரசை சேர்ந்த நிலங்கள்

12. பொருந்தாததைக் கண்டறிக.

A) நகரப் பஞ்சாயத்துகளிலும் கிராம நிர்வாக அலுவலரே பிறப்பு இறப்பு பதிவாளராவார்
B) மழை கணக்கீட்டிற்கான நேரம் காலை 8:30மணி
C) தர்ஜா வாரிப் புள்ளி என்பது கி.க.23 ஆகும்
D) கி.கணக்கு 13 என்பது ரொக்கப் பதிவேடாகும்

13. புல வரைபடத்தில் மாறுதல்கள் செய்பவர்

A) வருவாய் ஆய்வாளர்
B) வட்டாட்சியர்
C) கிராம நிர்வாக அலுவலர்
D) நில அளவர்

14. நில அளவைக் கற்கள் தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் யாருக்கு அனுப்ப வேண்டும்?

A) வட்டாட்சியர் B) மாவட்ட ஆட்சியர் C) நில அளவர் D) தலைமை நில அலுவலர்

15. தடையாணை இனங்களுளல்லாதது

A) கனிம வளங்கள் கொண்ட நிலங்கள்

B) பிற்கால மற்றும் நடைமுறைகால திட்டங்களுக்கு தேவைப்படாதவை

C) அரசுப் பயன்பாட்டின் விரிவாக்கத்திற்காக தேவைப்படுபவை

D) சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படுமென கருதப்படுபவை

16. பின்வரும் கூற்றுகளை ஆராய்க

i. மீன்வள குத்தகை ஏலம்விடும் அதிகாரமுடையவர் கிராம நிர்வாக அலுவலர்

ii. மீன்கள் குத்தகை ஏலம்விடுவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்பவர் வட்டாட்சியர்

A) i மட்டும் சரி B) ii மட்டும் சரி C) இரண்டும் சரி D) இரண்டும் தவறு

17. நிலவரி தொடர்பானவற்றுள் தவறானதை கண்டறிக.

A) பசலிக்கான கேட்பினை ஜூன் மாத இறுதிக்குள் நிர்ணயம் செய்யவேண்டும்

B) பசலிக்கான உத்தேச கேட்பினை நவம்பர் மாத இறுதிக்குள் நிர்ணயம் செய்ய வேண்டும்

C) பசலிக்கான நிலவரி வசூல் ஜனவரி முதல் நான்கு தவணைகளாகப் செய்ய வேண்டும்

D) கிஸ்தி மாதங்கள் என்பவை ஜனவரி முதல் ஏப்ரல் வரையாகும்

18. வறியர் தொடர்பான விவர அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைப்பவர்

A) கிராம நிர்வாக அலுவலர் B) வட்டாட்சியர்

C) மாவட்ட ஆட்சித்தலைவர் D) நில நிர்வாக ஆணையர்

19. வறியர் வழக்கு செலவு ரூ.1000/- க்கு மேல் வசூலாகாத தொகையினை தள்ளுபடி செய்யும் அதிகாரம் உடையவர்

A) வட்டாட்சியர் B) வருவாய் கோட்ட அலுவலர்

C) மாவட்ட வருவாய் அலுவலர் D) மாவட்ட ஆட்சித் தலைவர்

20. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

(A): கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படும் கிராம கணக்குகள் சமூகத் தணிக்கைக்கு உட்படுத்தவேண்டியவை

(R) ரயத்துகள் அடங்கல் கணக்கினை சரிபார்க்கும் உரிமையுடையவர்கள்

A) A மற்றும் R சரி. ஆனால் R என்பது A வுக்கு சரியான விளக்கமல்ல

B) A மற்றும் R சரி. R என்பது Aவிற்கு சரியான விளக்கம்

C) A சரி R தவறு

D) A தவறு R சரி

21. ஒரு புதிய நில அளவை புலம் உருவாக்க தேவையான அதிகபட்ச பரப்பு

A) 2 ஹெக்டர் B) 4 ஹெக்டர் C) 20 ஹெக்டர் D) 15 ஹெக்டர்

22. புதிய நில அளவை புலங்கள் உருவாக்கப்படும்போது தமிழ்நாடு நில அளவை சட்டத்தின்படி விளம்பரம் பற்றி கூறும் பிரிவு

A) 9 B) 10 C) 11 D) 13

23. கைப்பற்றும் நிலங்களை உட்பிரிவு செய்யும்போது அ பதிவேட்டில் உட்பிரிவுகள் எண்களை கொண்டிருந்தால் புதிய உட்பிரிவுகள்

A) எண்களால் குறிப்பிட வேண்டும் B) எழுத்துக்களால் குறிப்பிட வேண்டும்

C) எண்களாலும் எழுத்துகளாலும் குறிப்பிடலாம் D) நில அளவரின் விருப்பத்திற்கு ஏற்ப குறிப்பிடலாம்

24. நிலவரி திட்டத்தின்போது நிலவரி திட்ட அலுவலரால் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் விரிவான அறிக்கையின் பெயர்

A) நிலவரி திட்ட அறிக்கை B) G விவர அறிக்கை

C) கிராம விவர அறிக்கை D) சுற்றாய்வு அறிக்கை

25. நிலவரி திட்டமானது எத்தனை வருடங்களுக்கு ஒருமுறை நடைமுறைபடுத்த வேண்டும்?

A) 15 B) 20 C) 25 D) 30

26. ஏரியின் உள்வாய் பகுதியில் அமைந்துள்ள நீர்பிடிப்புக்கு உட்படாத நிலங்கள்

A) புன்செய் B) நன்செய் C) மானாவாரி D) அனாதீனம்

27. அனாதீனம் என வகைப்பாடு செய்யப்பட்ட நிலங்கள்

A) கல்லாங்குத்து B) உரிமை கொண்டாடப்படாத நிலங்கள்

C) நிலமாற்றம் செய்யப்பட்ட நிலங்கள் D) சமுதாய புறம்போக்கு நிலங்கள்

28. கிராம கணக்கு எண் 18 என்பது

A) மழைக்கணக்கு B) தர்ஜாவரி புள்ளி

C) வசூலிக்கப்பட்ட நிலவரிக்கான பற்று சீட்டு D) கிராம நிர்வாக அலுவலர் ரொக்க பதிவேடு

29. நிலவரி நிலுவை என கருதப்படுவது

A) கிஸ்தி மாதங்களுக்குள் செலுத்தப்படாதது

B) பிரதி மாதம் 10-ஆம் தேதிக்குள் செலுத்தப்படாதது

C) கிஸ்தி மாதங்ககளில் 10-ஆம் தேதிக்குள் செலுத்தப்படாதது

D) பசலி ஆண்டில் செலுத்தப்படாதது

30. டிமாண்ட் நோட்டீஸ் எண் 1 எதனுடன் தொடர்புடையது?

A) நில குத்தகை விளம்பரம் B) நிலமாற்ற விளம்பரம்

C) ஆக்கிரமனம் அகற்றுதல் D) நிலவரி வசூல்

31. ஜப்தி நடவடிக்கை தொடர்பான கூற்றுகளை ஆராய்க.

I) அசையும் சொத்துகளை முதலில் ஜப்தி செய்ய வேண்டும்

II) விலக்களிக்கப்பட்ட இனங்களையும் ஜப்தி செய்யலாம்

III) சூரிய உதயதிற்கு முன்னரே நடவடிக்கையினை துவக்கலாம்

IV) ஜப்தி செய்யப்பட்ட சொத்து தொடர்பான விவரங்கள் பற்றி கூறுவது படிவம் - 2

விடியல்

V) ஜப்தி செய்யப்பட்ட சொத்து ஏலம் விடுவது பற்றி கூறும் படிவம் - 3

VI) படிவம் - 3 சார்வு செய்யப்பட்டதிலிருந்து 15 நாட்களுக்கு மேல் ஏலம் விடலாம்

மேற்கண்டவற்றுள்

A) I, II, III மட்டும் சரி B) IV, V, VI மட்டும் சரி

C) I, II, V, VI மட்டும் சரி D) III, IV, V, VI மட்டும் சரி

32. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி சட்டம் 1966ன் படி குடிசை பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கான வரிச்சலுகை

A) 50% B) 25% C) 10% D) முழுச்சலுகை

33. பட்டா மாறுதல்களுக்கான மேல்முறையீட்டு அலுவலர்கள்

A) வட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர்

B) மாவட்ட வருவாய் அலுவலர், மண்டல துணை வட்டாட்சியர்

C) வருவாய் கோட்ட அலுவலர், மாவட்ட ஆட்சியர்

D) வட்டாட்சியர், வருவாய் கோட்ட அலுவலர்

34. நிலஉரிமையை விட்டு கொடுக்கும்போது, இருக்கக்கூடாதது

A) நிபந்தனை அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களாக இருத்தல்

B) கைவிடக்கோரும் நிலத்திற்கு செல்ல வழி இருத்தல்

C) நன்செய் எனில் 1 ஏக்கரும், புன் செய் எனில் 2 ஏக்கர் இருத்தல்

D) உரிமை துறப்பவரின் நிபந்தனை இன்றி இருத்தல்

35. மாறுதல்களின் போது மாற்றத்திற்கு உட்படும் கிராம கணக்குகளுள் அல்லாதது

A) அ பதிவேடு B) கிராம கணக்கு - 2

C) கிராம கணக்கு எண் - 3 D) கிராம கணக்கு -13

36. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஒப்படை செய்ய வகைசெய்யும் வருவாய் நில ஆணை

A) 15 B) 21 C) 21A D) 24

37. அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமனத்தை அகற்ற தேதி குறிப்பிட்டு வழங்கும் நோட்டீஸ்

A) நோட்டீஸ் எண் 6(1) B) நோட்டீஸ் எண் - 6 C) நோட்டீஸ் எண் - 7 D) நோட்டீஸ் எண் - 8

38. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

I) ஆக்கிரமனங்களை அகற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளில் உரிமையியல் நீதிமன்றங்கள் தலையிட முடியாது

II) ஆக்கிரமனங்களை அகற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளில் உயர்நீதிமன்றங்கள் மட்டுமே தலையிட முடியும்

A) I சரி B) II சரி C) I, IIம் சரி D) I, IIம் தவறு

39. நில உச்சவரம்புக்கு மேல் விவசாய நிலங்களை வணிக மற்றும் தொழில் நோக்கங்களுக்காக வாங்கும் பட்சத்தில் அனுமதி பெற வழிவகை செய்யும் தமிழ்நாடு நில சீர்திருத்த சட்டப்பிரிவு

A) 37 B) 38 C) 37(A) D) 37(B)

40. அரசாணை 2(D) எண்-10 (தொ (ம) வே.வ. துறை) நாள் 28.3,2005ன் படி சொந்த ஏர் உழவு மாடுகளுடன் உழுபவருக்கான குறைந்தபட்ச ஊதியம்

A) நாள் ஒன்றுக்கு ரூ.150 B) நாள் ஒன்றுக்கு ரூ.80

C) நாள் ஒன்றுக்கு ரூ.70 D) விளைச்சலில் 8-ல் ஒரு பங்கு

41. நில குத்தகை விடும் நேர்வுகளில் ரூ.50000/-க்கு மேல் நிதி அதிகாரம் உடையவர்

A) வட்டாட்சியர் B) வருவாய் கோட்ட அலுவலர்

C) மாவட்ட ஆட்சியர் D) நில நிர்வாக ஆணையர்

42. பொருத்துக.

| <u>நில ஒப்படை அலுவலர்</u> | <u>நிதிவரம்பு</u> |
|---|---|
| a. வட்டாட்சியர் | 1. ரூ. 200000 |
| b. கோட்டாட்சியர் | 2. ரூ. 20000 |
| c. மாவட்ட வருவாய் அலுவலர் | 3. ரூ. 250000 |
| d. மாவட்ட ஆட்சியர் | 4. ரூ. 10000 |
| e. நில நிர்வாக ஆணையர் | 5. ரூ. 50000 |
| f. அரசு | 6. ரூ. 250000க்கு மேல் |

| | a | b | c | d | e | f |
|---|---|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 5 | 3 | 1 | 6 |
| B) | 4 | 3 | 2 | 1 | 5 | 6 |
| C) | 4 | 2 | 5 | 1 | 3 | 6 |
| D) | 4 | 5 | 6 | 3 | 2 | 1 |

43. நிலவகைப்பாடு மாற்றத்திற்கான உத்தரவினை அளிப்பவர்

A) வட்டாட்சியர் B) கோட்டாட்சியர்

C) மாவட்ட வருவாய் அலுவலர் D) மாவட்ட ஆட்சியர்

44. ஒப்படையிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலங்கள்

I) ஆட்சேபனையற்ற தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்கள்

II) உள்ளாட்சி அமைப்புகளின் தீர்மானம் பெறப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிலங்கள்

III) கிராம நத்தம் புறம்போக்கின் அருகிலுள்ள நிலங்கள்

IV) கனிம வளங்கள் உள்ள நிலங்கள்

V) ஒதுக்கபட்ட காடுகளிலிருந்து 200 மீட்டருக்குள் அமைந்துள்ள நிலங்கள்

VI) துறைமுகம் (ம) இரயில்வே நிலங்களுக்கு 805 மீட்டருக்குள் அமைந்திருப்பவை

A) I, II B) I, II, III, IV C) III, IV, V, VI D) IV, V, VI

45. A(1) நோட்டீஸ் என்பது

A) நில ஒப்படையின்போது ஆட்சேபனைக்கு கோரும் விளம்பரம்

B) ஜப்தியின்போது தேதி அறிவிப்பது

C) ஆக்கிரமனம் அகற்றுதலுக்கான தேதி அறிவிப்பது

D) மீன் ஏலத்திற்கான தேதி அறிவிப்பது

46. வீட்டுமனை ஒப்படையின்போது முன்னுரிமை அளிக்க வேண்டியவர்கள்

A) இராணுவத்தில் இருந்தபோது உயிர் இழந்தவர்களின் குடும்பம்

B) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

C) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் D) முன்னாள் இராணுவத்தினர்

47. வீட்டுமனை ஒப்படை வழங்கப்பட்டவுடன் வீடுகட்ட வேண்டிய குறைந்தபட்ச கால அளவு

A) 6 மாதம் B) 12 மாதம் C) 3 வருடங்கள் D) 2 வருடங்கள்

48. மாநில அரசு நிலங்களை அரசு துறைகளுக்கு உரிமை மாற்றம் செய்ய வகை செய்யும் வருவாய் நிலை ஆணை

A) 23 B) 24 C) 15 D) 24(A)

49. ஒன்றுக்கு மேற்பட்ட பாசன ஆதாரங்களிலிருந்து பாசனம் பெற பதிவு செய்யப்பட்ட நிலங்கள்

A) ஆயக்கட்டு நிலங்கள் B) இருபோக நன்செய் நிலங்கள்

C) Compound செய்யப்பட்ட இருபோக நன்செய் நிலங்கள்

D) கூட்டு ஆயக்கட்டு

50. ஒரு பருவத்திற்கு மேல் பூமியில் அறுவடை செய்யாமல் உள்ள சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள்

A) நாற்றங்கால் பயிர்கள் B) டபசல் பயிர்கள்

C) மானாவாரி பயிர்கள் D) நீண்டகால பயிர்கள்

51. முறையற்ற நீர்ப்பாசனம் என்பது

A) குறிப்பிட்ட பாசன ஆதாரத்துடன் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கான நீர்ப்பாசனம்

B) ஒன்றுக்கு மேற்பட்ட பாசன ஆதாரத்துடன் பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கான நீர்ப்பாசனம்

C) குறிப்பிட்ட பாசன ஆதாரத்துடன் பதிவு செய்யப்படாத நிலங்களுக்கான நீர்ப்பாசனம்

D) நாற்றங்கால் பயிர்களுக்கான நீர்ப்பாசனம்

52. பசலி ஆண்டு என்பது

A) ஏப்ரல் முதல் ஜூன் வரை B) ஏப்ரல் முதல் மார்ச் வரை

C) ஜூலை முதல் ஜூன் வரை D) ஜூன் முதல் ஜூலை வரை

53. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சிமுறையில் ஒரு வட்டத்திற்கான வருவாய் தீர்வாய அலுவலர்களாக இருப்பவர்கள்

A) மாவட்ட ஆட்சியர் (ம) மாவட்ட வருவாய் அலுவலர்

B) மாவட்ட ஆட்சியர் (ம) வருவாய் கோட்ட அலுவலர்

C) வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர்

D) மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் நில நிர்வாக ஆணையர்

54. வருவாய் தரக்கூடிய பாசன ஆதாரங்களை பாதுகாக்க வழங்கப்பட்ட இனாம்கள்

A) சொந்தம் B) தர்மதாயம் C) தசபந்தம் D) தேவதாயம்

55. கலப்பு திருமணமாக கருதப்படாதது

A) ஆதிதிராவிடர் மற்றும் சீர்மரபினர்

B) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர்

C) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர்

D) முன்னேறிய வகுப்பினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர்.

**!வாழ்த்துகள்!**

## VAO Answers

| Q.No. | Ans | Q.No. | Ans | Q.No. | Ans | Q.No. | Ans |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 16 | D | 31 | B | 46 | A |
| 2 | A | 17 | B | 32 | D | 47 | B |
| 3 | A | 18 | C | 33 | C | 48 | B |
| 4 | B | 19 | D | 34 | A | 49 | D |
| 5 | C | 20 | B | 35 | D | 50 | B |
| 6 | C | 21 | C | 36 | A | 51 | C |
| 7 | D | 22 | D | 37 | A | 52 | C |
| 8 | D | 23 | B | 38 | C | 53 | A |
| 9 | A | 24 | D | 39 | C | 54 | C |
| 10 | C | 25 | D | 40 | A | 55 | B |
| 11 | C | 26 | C | 41 | D | | |
| 12 | A | 27 | B | 42 | C | | |
| 13 | D | 28 | C | 43 | D | | |
| 14 | D | 29 | C | 44 | C | | |
| 15 | B | 30 | D | 45 | A | | |

விடியல்

# PG TRB
# Tamil , Commerce, History & English

தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள்

தொடங்கும் நாள் 27.02.2016 (சனி)

இடம் : **விடியல் பயிற்சி மையம்,**

MTC வளாகம்,

அம்மா உணவகம் அருகில்,

கொசப்பேட்டை, வேலூர்.

செல் : **9092997509, 8122706441**